# கணினியும் நம் வாழ்வும்!

பல அறிஞர்களின் வழிகாட்டுதல்களாலும் விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புகளாலும் உலகம் வளர்ச்சியடைந்து பரிணமிக்கத் தொடங்கியுள்ளது. அக்காலத்தில் குகை மனிதர்கள் தாங்கள் பார்த்ததையும் எண்ணியதையும் சுவர்களில் வரைந்தார்கள். அதற்குப் பின் மக்கள் சுவடிகளிலும் புத்தகங்களிலும் எழுத ஆரம்பித்தார்கள். ஆனால் சமீபத்திலோ, மக்கள் கணினி வாயிலாகவே தங்கள் வேலைகளையும் மாணவர்கள் தங்கள் வீட்டுப் பாடங்களையும் செய்யத் தொடங்கிவிட்டனர்.

ஆம், தொழில்நுட்பம் வளர்ந்து மேலோங்கிவிட்டதால், அதற்கேற்ப மக்கள் வாழும் சூழ்நிலை உருவாகிவிட்டது. சிங்கப்பூரில் பெரும்பாலான வீடுகளில் கணினியைப் பார்க்கலாம். அதைக் கொண்டே மாணவர்கள் தங்கள் கல்வியைக் கற்கிறார்கள். தற்போது பள்ளிகளில் பாடங்கள் நடந்தாலும் பிற்காலத்தில் கணினியே நமக்குப் பாடம் நடத்துபவையாக அமையப் போகின்றன. அதனால்தான் சில பள்ளிகள் இப்போதே கணினி மூலம் மாணவர்களுக்குப் பாடங்களைச் செய்ய ஊக்குவிக்கின்றன.

கணினி எவ்வாறு மாணவர்களுக்கு உதவுகிறது என்பதைச் சற்றுப் பார்ப்போம். மாணவர்கள் தங்களுக்குத் தெரியாததை அல்லது தெரிய விரும்புவதை இணையத்தின் வாயிலாகத் தேடுகின்றனர். அது மட்டுமின்றித் தங்கள் கருத்துக்களைப் பிறரிடம் வெளிப்படுத்த மின் அஞ்சலையும் பயன்படுத்துகின்றனர். இதிலிருந்து மாணவர்களுக்குக் கணினி முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக உள்ளது என்பது புலனாகின்றது.

இன்றைய இளைஞர்கள் கணினியிலேயே வீட்டுப் பாடங்கள் செய்வது, புதியவற்றைக் கற்றுக் கொள்வது, நண்பர்களுடன் உரையாடுவது, கணினி விளையாட்டுகளில் ஈடுபடுவது போன்ற பல நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். சமீபத்தில் நிகழ்ந்த ‘சார்ஸ்’ நோய் பரவலால், பள்ளிகள் மூடப்பட்ட சூழலை எடுத்துக் கொள்ளுங்கள். பள்ளிகள் மூடியதும் மாணவர்கள் அகமகிழ்ந்தார்கள். ஆனால், சில நாள்கள் கழித்து ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வீட்டுப் பாடங்களைக் கணினிவழி அனுப்பினார்கள்.

அண்மையில் நம் சிங்கப்பூர்ப் பிரதமர், சிந்திக்க வைக்கும் ஒரு கருத்தை வலியுறுத்தினார். அவர் கூறியதுபோல் பிற்காலத்தில் ஆசிரியர்கள் மற்றும் பள்ளிகளின் தேவை குறையலாம். மாணவர்கள், வீட்டுப் பாடங்கள், தேர்வுத்தாள்கள், பயிற்சிகள் போன்றவற்றைக் கணினி மூலம் செய்து அவற்றைத் திருத்தியும் கொள்ளலாம். மாணவர்களுக்காக அம்மாதிரியான ஒரு கணினி உருவாகலாம்.

எனவே கணினியே நமக்குப் பிற்காலத்தில் கைகொடுக்கப் போவதால், இப்பொழுதே அதை நாம் நம் வாழ்க்கையில் ஒரு பகுதியாகக் கருதி, அதனை நல்ல முறையில் கையாள வேண்டும். அதோடு ஆசிரியர்களும் மாணவர்களுக்குக் கணினியில் பயிற்சிகளைச் செய்யக் கற்றுக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் நமக்கும் சரி நமது பிற்காலச் சந்ததியினருக்கும் சரி வாழ்க்கை சிறப்பாக அமையும்.

**அரவிந்த்**
**St Andrew’s Secondary School**
**Sec 3HT3**